செப்டம்பர் 11

# நற்செய்தியைப் பரப்பு

**அப்போஸ்தலர் 17:16-21**



பவுல் எங்கு சென்றாலும் இயேசுவை அறிவிக்க எப்போது வாய்ப்பு கிடைக்கும் என ஆவலோடு எதிர்நோக்கினார். எத்தனை விதமான மக்களுடன் பவுல் பேசுகிறார்?

அத்தேனே பட்டணம் - யூதர்களோடும் பக்தியுள்ள புற ஜாதியாரோடும்(வச.17) ஞானிகளோடும்(வச.18) அந்நியரோடும் அத்தேனே பட்டணத்தாரோடும் (வச.21)

நற்செய்தி எல்லோருக்கும் உரியது. கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல. இந்தியா வில் தோமா அப்போஸ்தலரால் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு இன்று ஏறத்தாழ 2000 ஆண்டுகள் ஆகிறது. ஆனாலும் ஏன் இன்னும் மிகச்சிலரே ஆண்டவர் இயேசுவின் அன்பை உணர்ந்து அவரைப் பின்பற்றுகிறார்கள்? நாம் அந்த நற்செய்தியை நமக்கு மட்டுமே வைத்துக் கொள்வதினால் அல்லவா?

**நற்செய்தியைப் பரப்ப விருப்பமும் தைரியமும் தாரும் ஆண்டவரே.**

ரோமர் 12:16

செப்டம்பர் 12

# தேவன் உயிருள்ளவர்

**அப்போஸ்தலர் 17:22-34**

பவுல் அத்தேனே பட்டணத்தில் கண்டது போலவே நம் இந்திய நாட்டிலும் நம்மைச் சுற்றி விக்கிரகங்கள்(சிலைகள்) நிறைந்து இருப்பதைக் காண்கிறோம்.

சிலை வணக்கம் எவ்வளவு பயனற்றது என்பதை பவுல் இன்று விளக்குகின்றார்.

1. **அனைத்து உயிரினங்களையும் படைத்த ஆண்டவரை ஒரு சிலைக்குள்ளோ, படத்துக்குள்ளோ அடக்க முடியாது (வச.24).**
2. **ஆண்டவர் மிகப் பெரியவராதலால் நாம் நினைக்கிறபடி மிகச் சிறந்த சித்திர வேலை களினாலும்விலையுயர்ந்தபொன்வெள்ளிஆகியபொருட்களினாலும் அவரது உருவத்தைச் சித்தரிக்க முடியாது. (வச.29)**
3. **இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினதால் தேவன் உயிரோ டிருக்கிறவர் என்பதை நமக்கு நிரூபித்துக் காட்டியுள்ளார். விக்கிரகமோ உயிரற்றது.**



**1 யோவான் 5:21; 1 கொரிந்தியர் 10:7**

1 கொரிந்தியர் 10:7